**1. இயல்புநவிற்சி அணி (தன்மை அணி) :**

- ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறு கூறுவது இயல்புநவிற்சி அணி ஆகும்.

சான்று:

"தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவார்."

- இப்பாடலில் தயிர் கடையும் ஆய மங்கையரின் தன்மை உள்ளவாறே அழகுபடச் சொல்லப்படுவதைக் காணலாம்.

எ.கா: தமிழ்மொழி இனிமையானது
தென்னை மரம் உயரமானது

**2. உயர்வு நவிற்சி அணி :**

- ஒரு பொருளின் தன்மையை மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

சான்று:

உயரமான மலையை 'விண்ணைத்தொடும் மலை' என வருணித்தல்

உயரமான வைக்கோல் போரை 'வானை முட்டும் வைக்கோல் போர்' என உயர்த்திக் கூறுதல்.

எ.கா: வான் புகழ் கொண்ட தமிழ்நாடு

**3. உவமையணி :**

- உவமை, உவமேயம் இவ்விரண்டையும் இணைக்கும் உவமஉருபு வெளிப்படுமாறு அமைவது உவமையணி எனப்படும்.

சான்று: ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

- ✶ உவமை : ஊருணி நீர்நிறைதல்
- ✶ உவமேயம் : உலகவாம் பேரறிவாளன் திரு
- ✶ உவமஉருபு : அற்று

- எ.கா: போல, புரைய, ஒப்ப, மான, உறழ, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன, பிறவும்

**4. எடுத்தக்காட்டு உவமையணி :**

❖ உவமை, உவமேயம் இரண்டும் தனித்தனியாக எடுத்துக்காட்டி இடையில் உவம உருபு மறையுமாறு அமைவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

சான்று:

புறந்தூய்மை நீரா னமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

உவமை: உடம்பின் தூய்மை நீரால் அமையும்

உவமேயம்: உள்ளத்தின் தூய்மை உண்மை பேசுவதால் உண்டாகும்

(உவம உருபு இவ்வணியில் வராது)

**5. உருவக அணி :**

❖ உவமானம் வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாத வகையில், உவமானத்தின் இயல்புகளை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது உருவக அணியாகும்.

| | | | |
|---|---|---|---|
| சான்று: மதிமுகம் | - | மதி போன்ற முகம் - | உவமை |
| முகமதி | | -முகம் ஆகிய மதி - | உருவகம் |

"இன்சொல் வினைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

| | | | | |
|---|---|---|---|---|
| இன்சொல் | - | விளைநிலம் | அன்பு - | நீர் |
| ஈதல் | - | விதை | அறம் - | கதிர் |
| வன்சொல் | - | களை | | |

**6. ஏகதேச உருவக அணி :**

❖ கவிஞர் தாம் எடுத்துக்கொண்ட பல பொருள்களை உருவகப்படுத்திக் கூறும் போது ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி அதனோடு தொடர்புடைய மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

❖ பிறவி - கடலாக உருவகப்படுத்தி விட்டு, கடக்க உதவும் இறைவனடியைத் தெப்பமாக உருவகப்படுத்தவில்லை.

**7. இல்பொருளுவமையணி :**

- உலகில் இல்லாத பொருளை ஒன்றிற்கு உவமையாக்கி கூறுவது இல்பொருளுவமையணி ஆகும்.

  அன்பகத் தில்லா உயர்வாழ்க்கை வன்பாற்கன்

  வற்றல் மரந்தளிர்த் தற்று

- எ.கா: பாலை நிலத்தில் பட்டுப்போன மரம் தளிர்த்தது போல

**8. பிறிதுமொழிதல் அணி :**

- புலவன், தான் கருதிய பொருளை நேரடியாகச் சொல்லாமல் அதனோடு தொடர்பு உடையனவற்றைச் சொல்லி விளங்க வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

  பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

  சால மிகுத்துப் பெயின்

**9. வேற்றுமையணி :**

- செய்யுளில் இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறிப்பின்னர் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணி ஆகும்.

  தீயினால் சுட்டப் புண் உள்ளாறும் ஆறாதே

  நாவினால் சுட்ட வடு

**10. நிரல் நிரையணி :**

- சொல்லையும் பொருளையும் "வரிசையாக (நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது நிரல் நிரையணி ஆகும்.

  அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

  பண்பும் பயனும் அது.

**11. தற்குறிப்பேற்ற அணி :**

- இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

  எ.கா: இருட்பகை இரவி இருளென தன்மையும்

  கருதி காய்வனோ என்றுயிர்த்து

**12. வஞ்சப் புகழ்ச்சி அணி :**

- புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப் புகழ்ச்சியணி ஆகும்

  எ.கா: கல்லால் அடித்தற்கோ காலால் உதைத்ததற்கோ

  வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்

**13. இரட்டுற மொழிதல்அணி (சிலேடை) :**

- ஒரு சொல் இருபொருள் பட அமைந்து வருதல் இரட்டுற மொழிதல் எனப்படும். இதனை "சிலேடை" எனவும் வழங்குவர். இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும்.

**14. சொற்பொருள் பின்வருநிலையணி :**

- செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

எ.கா: தீயவை தீயபயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்

**15. சொல் பின்வரு நிலையணி :**

- செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல் பின்வரு நிலையணி ஆகும்.

எ.கா: துப்பார்க்கு துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
துப்பாய தூவும் மழை

**16. பொருள் பின்வரு நிலையணி :**

- செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

எ.கா : அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை- மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்தன கருவிளை
கொண்டன காந்தள் குலை - இப்பாடலில் மலர்தல் என்ற பொருளில் அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல் ஆகிய சொற்கள் வந்துள்ளன.

**17. வேற்றுப்பொருள் வைப்பணி :**

- புலவர் தாம் கருதிய பொருளை நிலைநாட்ட உலகம் அறிந்த வேறொரு பொருளை சான்றுகாட்டி கூறும்பொழுது பொதுப்பொருளால் சிறப்பு பொருளையும், சிறப்புப்பொருளால் பொதுப்பொருளையும் விளக்குவதனை வேற்றுப்பொருள் வைப்பணி என்பர்.

எ.கா : உரைமுடிவு காணான் இளையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை